உ

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் வரலாறு



பேரூராதீன வெளியீடு

பேரூராதீனம், கோவை - 641 010.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

பேரூராதீனம் பேரூர் சாந்தலிங்க அடிகளார் திருமடாலயம்
திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்டார் சந்தானம் கொடி வழி

அகச் சந்தானக் கொடி வழி

சீகண்ட பரமசிவன்

1). திருநந்தி தேவர்

2). சனற் குமாரர்

3). சத்திய ஞான தரிசனிகள்

4). பரஞ்சோதி முனிவர்.

புறச் சந்தானக் கொடி வழி

1). மெய்கண்ட தேவர்

2). அருணந்தி சிவாச்சாரியார்

3). மறைஞான சம்பந்தர்

4). உமாபதி சிவாச்சாரியார்

5. சிதம்பரம் மச்சு செட்டி அருணமச்சிவாயர்

6. சித்தர் சிவப்பிரகாசர்

7. காழிக்கங்கை மெய்கண்டார்
(இவர் மரபிலே வருவது)
(1). காஞ்சி தொண்டை மண்டல ஆதீனம்.
(2). தருமபுர ஆதீனம்

8. நமச்சிவாய மூர்த்திகள்
(3) (திருவாடுதுறை ஆதீன நிறுவனர்)

9. பட்டீசுவரம் சிவப்பிரகாசர்
(4). (திருவண்ணாமலை துறையூர் ஆதீனநிறுவனர்)
↓

10. மறைஞான தேசிகர்

11. அம்பலவாண தேசிகர்
(இவர் மரபிலே வருவது
திருவாவடுதுறை ஆதீனம்)

(. . . தொடர்ச்சி பின் அட்டையில் காண்க)

திருச்சிற்றம்பலம்

அருள்மிகு சாந்தலிங்க அடிகளார் வரலாறு

பதினேழாம் நூற்றாண்டில் பேரூர்த் திருமடத்தின் ஆதிகுருமுதல்வராக விளங்கியவர் சாந்தலிங்கர். இவர் திருவண்ணாமலை துறையூர், துறைமங்கலம், திருமுதுகுன்றம், மயிலம் பொம்மையபாளையம், கும்பகோணம் பெரியமடம் முதலான திருமடங்களோடு நெருங்கிய தொடர்புடையவராக விளங்கியுள்ளார். வீரசைவர் அல்லாத சிதம்பரம் மௌனசாமிகளை வீரசைவராக்கிய பெருமைக்குரியவர் .

திருக்கயிலாயபரம்பரையில் சீரும், சிறப்பும் செல்வாக்கும் பெற்ற திருவாவடுதுறை ஆதீனநிறுவனர் பஞ்சாக்கரதேசிகர் அவர்களின் மாணாக்கராகவும், அவ்வாதீனத்தின் இரண்டாம் பட்டமாகவும் விளங்கித் திருவண்ணாமலை ஆதீனத்தை நிறுவிய துறையூர், சிவப்பிரகாசரைக் குருவாகப்பெற்றவர் சாந்தலிங்கர். எனவே, திருவாவடுதுறை ஆதீன மரபுவழியே சாந்தலிங்கர் மரபு தொடங்குகிறது. இத்தகு மரபுடைய சாந்தலிங்கரின் வரலாற்றை இனி அறியலாம்.

சங்க இலக்கிய காலத்திற்குப் பிறகு திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய அருளாளர்களின் பாடல்கள் மக்களிடையே சமய எழுச்சியை உருவாக்கின. மன்னர்களும், வள்ளல்களும் நால்வருக்குத் திருவுருவங்கள் அமைத்து வழிபாடு செய்து சமயப்பணியாற்றினர். அவர்களது கொள்கையாளர்கள் நால்வரது பெயர்களால் திருமடங்களை அமைத்தனர். தமிழகமெங்கும் பரவியிருந்த இத்திருமடங்கள் 12ஆம் நூற்றாண்டுவரை தமிழர்களின் சமயக்கோட்பாடுகளைப் பரப்பும் சமய நிறுவனங்களாக விளங்கின எனக்கல்வெட்டுகள் சான்றுபகர்கிறது[1].

இந்நிலையில் தமிழகத்தில் அயலவர்தாக்கம் நுழைந்தது. தமிழகத்தில் வடமொழி செல்வாக்குப் பெற்றது. பிறசமயங்களை வளர்க்கும் அமைப்புக்கள் தமிழகத்தில் தோன்றின. இச்சூழல் சிவநெறியாளர்களிடையே ஏக்கத்தை உருவாக்கியது. சைவ சித்தாந்த உண்மைகளைத் திருமுறை வழியில் விளக்குவதற்குரிய வழியினை அருளாளர்கள் மேற்கொண்டனர். அவ்வாறு தொடங்கப் பெற்ற மரபே 'கயிலாயமரபு' எனத் தோற்றம் பெற்றது. கயிலைநாதரே

1. நால்வர்களும் கல்வெட்களும் – கோவைக்கிழார்.

இம்மரபுக்கு முதல்வர் ஆவார். கயிலைநாதர் சைவசித்தாந்தச் செம்பொருளைத் தனது மாணாக்கராகிய நந்தியெம்பெருமானுக்கு அருளிச் செய்கிறார். அவ்வுண்மையினை நந்தியெம்பெருமான் தனது மாணாக்கர் சனற்குமார முனிவர் ஆதியர்க்கு அருளிச் செய்தார். சனற்குமாரர் தமது முதல் மாணவராக விளங்கிய சத்திய ஞானதரிசினிகளுக்குச் செம்பொருளை அருளிச்செய்தார். அவர் அச்செம்பொருளின் நுட்பத்தைப் பரஞ்சோதி முனிவருக்கு அருளினார். இம்மரபு, 'திருக்கயிலை அகச்சந்தான மரபு' எனப் போற்றப் பெறுகிறது.

இதனைத் தொடர்ந்து உருவாகிய புறச்சந்தான மரபில் முதலில் தோன்றியவர் 'மெய்கண்டார்'. இவர் நடுநாட்டில் உள்ள பாடல்பெற்ற தலமாதிய 'திருப்பெண்ணாகடம்' எனும் தலத்தில் அச்சுதக்களப்பாளருக்குச் சைவவேளாளர் மரபில் தோன்றியவர். இவரது இளமைப் பெயர் 'திருவெண்காட்டு நம்பி' என்பதாகும்.

"அச்சுதக்களப்பாளர் தமக்கு மகப்பேறின்மையைத் தமது குலகுருவாகிய சகலாகமபண்டிதரிடம் முறையிட்டார். அவரது திருவுளக்குறிப்பால் திருமுறைச் சுவடியில் கயிறு சார்த்திப் பார்த்தார். அந்நிலையில் 'பேயடையாப் பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவு' என்று தொடங்கும் திருமுறைப்பாடல் எதிர்ப்பட்டது.

இதுகண்டு மனமகிழ்ந்த சகலாகமபண்டிதர் அச்சுதக் களப்பாளரை நோக்கி, 'நீவீர் திருவெண்காடு சென்று, அங்குள்ள முக்குளத்தில் நீராடி, இறைவனை வழிபட்டால் மகப்பேறு கிட்டும்' என்கிறார். இவ்வாறாக இறைவன் திருவருளால் தோன்றிய திருவெண்காட்டு நம்பி, சிறுதேர் உருட்டி விளையாடிய நிலையில் வான்வழி வந்த பரஞ்சோதியார் உண்மைப் பொருளை அகத்தால் இனிது நோக்கி நம்பிக்கு அருளினார். அன்று முதல் திருவெண்காட்டு நம்பி 'மெய்கண்டார்' ஆனார். இவரது தத்துவஞானத்தையுணர்ந்த அச்சுதக்களப்பாளரின் குலகுரு சகலாகமபண்டிதர் தமக்கு மெய்ப்பொருள் உணர்த்த வேண்டிக் கொண்டார். மெய்கண்டாரும் அவரது விருப்பத்திற்கேற்ப மெய்ப்பொருளை உணர்த்தினார். இவரே அருணந்தி சிவாச்சாரியார் ஆவார். மெய்கண்டார் 'சிவஞானபோதம்' என்ற நூலை அருளினார். அந்நூற்பொருளை எளிமைப்படுத்தி அருணந்தியார் 'சிவஞான சித்தியார்' என்ற நூலையருளினார். இவரின் மாணாக்கர் 'மறைஞானசம்பந்தர்'. இம்மறைஞானசம்பந்தரின் அருள் மாணாக்கர்

'கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார்'. இவர் மெய்க்கண்ட சாத்திரங்களுள் எட்டு நூல்களை (சித்தாந்த அட்டகம்) அருளிய பெருமைக்குரியவர்.

இவர்வழிவந்த அருள்நமசிவாயரின் மாணாக்கரே திருவாவடுதுறை ஆதீனத்தை நிறுவிய நமசிவாயமூர்த்திகள் எனப்படும் 'பஞ்சாக்கர தேசிகர்'. இவ்வாதீனத்தின் இரண்டாம் பட்டமாக விளங்கியவர் 'ஆதிசிவப்பிரகாசர்'. தில்லையில் ஆடல்வல்லானுக்கு வைணவ நெறியாளர்களால் ஏற்பட்ட வழிபாட்டுச் சிக்கல்களை நீக்கும் பொருட்டு தில்லைவாழந்தணர் திருவாவடுதுறைக் குருமுதல்வரிடம் வேண்டினர். சிவப்பிரகாசர் நமசிவாயமூர்த்திகள் ஆணையை ஏற்றார், தில்லை சென்றார். திருமால் நெறியினரிடம் தக்காங்கு எடுத்துக் கூறினார். அவர்கள் மறுத்தனர். ஆடல்வல்லான் திருவுளப்படி வேலூரில் இருந்த நாயக்கமன்னரது அமைச்சராகிய, இலிங்கண்ணன் என்பவரை அணுகினால் ஆடல் வல்லான் வழிபாட்டிற்கு உள்ள சிக்கல் தவிர்க்கலாம் என்பதறிந்து வேலூர் சென்று தமது வருகையைத் தெரிவித்து தமது வழிபாடுகளை முடித்து, தமது வழிபடும் திருவுருவாகிய சிவலிங்கத்தை முடியில் அணிந்து அமைச்சரைக் காணச் சென்றார். அமைச்சர் இவரது தவப்பொலிவையும் அருள்தோற்றத்தையும் கண்டு பேரன்புடன் வணங்கி வழிபட்டான். தில்லையில் கூத்தப்பெருமான் நாள் வழிபாடு நடத்தத் தடைபடுத்திய செய்தியைத் தெரிவித்தார். அமைச்சர் சிவநெறியாளர் ஒருவரை நியமித்து முறையாக வழிபாடுகள் நடக்க ஆவனசெய்தான். அனுமுதல் சிவப்பிரகாசர் குருவருளாலும் திருவருளாலும், 'வீரசைவ' நெறியில் நின்றார். இவரே, தமிழகத்தில் வீரசைவ ஆதீனத்தைச் சைவசித்தாந்தமரபில் தோற்றுவித்த பெருமைக்குரியவராவர். நாயக்க மன்னன் அமைச்சராகிய இலிங்கண்ணனின் பணியால் திருவண்ணாமலையிலும், இலிங்கதுரை என்னும் குறுநில மன்னரால் துறையூரிலும் வீரசைவ ஆதீனத்தை நிறுவி, மக்களிடையே சமய உண்மைகளைப் பரப்பி வந்தார்.

திருவண்ணாமலையிலும், துறையூரிலும் சிவப்பிரகாசர் ஆதீனத்தலைவராகப் பொறுப்பேற்றுச் சமயப்பணியாற்றி வந்தார். 'தொண்டைநாடு சான்றோருடைத்து' என்ற பெருமைக்கேற்ப அந்நாட்டைச் சார்ந்தவராகக் கருதப்படும் சாந்தலிங்கர், இளமையிலிருந்தே சமய ஒழுகலாறுகளை மேற்கொண்டு குருவை நாடியிருந்தார். அக்காலத்தில் சிவப்பிரகாசரது தவவலிமையும், அருட்பொலிவும்

சீலத்தவரால் போற்றுவதைக் கேள்வியுற்றுத் திருவண்ணாமலைத் திருமடத்தை அணுகி, குருநாதரை வணங்கி, திருவுளக்குறிப்பறிந்து மகிழ்ந்தார். அவரைச் சிவமாகவே கண்டு வியந்தார். சிவப்பிரகாசர், சாந்தலிங்கரது நிலையுணர்ந்து 'வீரசைவ தீக்கை' அளித்துத் தமக்கு அணுக்கராக ஏற்றுக் கொண்டார். அன்று முதல் தமது குருநாதராகிய ஆதிசிவப்பிரகாசரிடம் உடனிருந்து திருவண்ணாமலை நாதரைத் தொழுது சாந்தலிங்கர் பணிசெய்தார்.

அக்காலத்தில், காஞ்சிபுரத்தில் தொண்டைமண்டல வேளாளர்கட்குக் குலகுருவாக விளங்கியவர் குமாரசாமிதேசிகர். அண்ணாமலையாரை வழிபடும் சிந்தனையில் திருவண்ணாமலைக்குப் பயணம் மேற்கொண்டார். வழியில் இடையிடையே சிவத்தலங்களில் தங்கி வழிபாடு மேற்கொண்டார். அந்நிலையில் அவரது பூசைப் பெட்டகத்தை மறதியால் முந்தைய இடத்தில் அணுக்கர்கள் விட்டுவந்ததால் நாட்பூசை செய்ய இயலாமல் வருந்தினார். அதைக் கேள்வியுற்ற வீரசைவர்கள் 'நீர் சிவலிங்கத்தைத் தனித்து வைத்ததனால் வந்த இடர்இது. ஆகவே அதனை அங்கலிங்கமாகத் தரித்துக் கொள்க' என்று கூறினர். இறைவனும் அவ்வாறே செய்க என ஆணை வழங்கினர். குமாரசாமிதேசிகர் நாடுபோற்றும் ஆதிசிவப்பிரகாசரை வணங்கி, குருதேவரிடம் வீரசைவதீட்கை பெற்று அவரின் அருள்மாணாக்கரானார்.

வீரசைவ ஆதீன முதல்வராக விளங்கித் தம்மை ஆட்கொண்ட சிவப்பிரகாசரின் பெயரைத் தமது மூத்த மகனுக்குச் சூட்டினார். அவரே, 'கற்பனைக் களஞ்சியம், துறைமங்கலம் சிவப்பிரகாசர் ஆவார். இவரது உடன்பிறப்புக்களாக வேலையர், கருணைப்பிரகாசர், ஞானாம்பிகை என மூவரும் விளங்கினர். அனைவரும் குருநாதரிடம் தீக்கைபெற்று அருள் மாணாக்கரானார்கள்.

பின்னர் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசரது குடும்பம் திருவண்ணாமலையில் சில காலம் தங்கியது. அங்கு சாந்தலிங்கரும், கற்பனைக்களஞ்சியம் சிவப்பிரகாசரும் இணைபிரியா நண்பர்களாயினர். இத்தகு சிவப்பிரகாசர் கலைவளம் மிக்க செந்நாவினராக முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை அருளினார். அவை வீரசைவக் கொள்கைகளையும், தத்துவக் கொள்கைகளையும் விளக்கும் வகையில் விளங்குகின்றன.

52-2

சாந்தலிங்கர் தமது குருமுதல்வருக்கு வழிபடு கடவுளான தில்லைப்பெருமானையே தமக்கும் குலதெய்வமாகக் கொண்டு கொற்றவன்குடித் திருமடத்தில் தமது குருநாதருடன் அணுக்கராக இருந்து தமது குருவாக விளங்குபவர் தில்லைக்கூத்தனே என்பதை

"கண்டென் களிகூர்ந்து சிவப்பிரகாச நாமம்
கொண்டோங்கு உருவோடு இவண்உற்றெனை ஆண்டகோவே,
பண்டேயொரு நீ வகுத்திட்ட படிக்குயானுன்
தொண்டாகி வந்தின்றுனைப் பாடத் தொடங்கினேனே"

எனவும்

"தில்லைப்பதிமேய சிவப்பிரகாசனேயோ
தொல்லைப்பிறவா நெறிமேவிய தோன்றலேயோ
அல்லல் பிறவிக்கு இளைத்தேன்தனை அஞ்சலென்றோர்
சொல்லைப் பகர்ாய் விடைமீதினம் தோன்றி நின்றே"

எனவும் போற்றினார். தில்லைப்பெருமானைப் புகழ்ந்து தமது 'வைராக்கிய சதகத்தில்' பல பாடல்களைப் பாடிமகிழ்ந்தார்.

தமது குருவிடம் வாதிட்டுத் தோல்வியுற்று மாணவரான மத்துவ நெறியினரான 'தூளிதம் காளத்திநாதன்' என்பவரின் அருட்பொலிவினால் ஈர்க்கப் பெற்ற சாந்தலிங்கர் தமது வழிகாட்டும் ஆசிரியராக ஏற்றுக் கொண்டார் என்பதைக்

"காணாத பவக்கடலின் கரைகாண எற்குத்
கோள்நாகணி மார்ப மெய்யன்பு கொடுத்தியன்றே
நாணார்திசைத் தேன் திருக்காளத்தி நாத உன்தாள்
பேணாது அவலக்கடல் மூழ்கிய பேதையேனே"

என வைராக்கிய சதகத்தில் அருளியுள்ளார்.

துறையூர் சிவப்பிரகாசர் ஆந்திர, கன்னடநாட்டிலுள்ள திருத்தலங்களுக்கு வழிபாட்டுப் பயணம் மேற்கொண்டார். அவருடன் சாந்தலிங்கரும் பயணமானார். ஆந்திரத்தில் நந்திமலையில் சாந்தலிங்கரின் மரபைக்கூறும் திருமடம் உள்ளதால் இது அறியலாகிறது. இத்தலவழிபாட்டுப் பயணத்திற்குப் பின் சிவப்பிரகாசருடன் துறையூரில் சாந்தலிங்கரும், சிலகாலம் தங்கி வழிபாடு செய்தார். அதனால் இவரை, 'துறையூர் சாந்தலிங்கர்' என அழைத்ததாக வரலாறு கூறுகிறது.

துறையூரிலிருந்து ஆதிசிவப்பிரகாசரும், சாந்தலிங்கரும் மீண்டும் திருவண்ணாமலைக்கு எழுந்தருளினர். துறையூர் சிவப்பிரகாசர் அத்துவிதவெண்பா ஆதிய பல நூல்களை இயற்றியுள்ளார். சிவப்பிரகாசருக்கு மேற்குத்தல வழிபாடு செய்யும் விருப்பம் மலர்ந்தது. இருவரும் மேற்குத்தலப் பயணம் மேற்கொண்டனர். அப்பயணத்தில் கொங்குநாட்டிலுள்ள திருச்செங்கோட்டு இறைவனை வழிபட்டுத் தங்கினார்.

இத்தலப்பயண வரலாற்றில் ஆதிசிவப்பிரகாசரிடம் அழுக்காறு கொண்ட வேதியர்களின் செருக்கினை அழிப்பதன் பொருட்டுக் கல்நந்தியைக் கடலையை உண்ணச் செய்தார். இதற்கு அகச்சான்றாக,

“வில்லா மணிச்சபையின் வித்தகா கூடலின்முன்
கல்லானைக்கு இக்குஅருத்திக் காட்டியவுன்—வல்லாண்மை
கட்டுரையே ஆகிலிந்தக் கல்வேறு எழீஇக் கடலை
இட்டஇவர் முன்தினச் செய்யே” என்ற வெண்பாத் திகழ்கிறது.

இருவரும் அங்கிருந்து புறப்பட்டு ‘மீகொங்கில் அணிகாஞ்சிவாய்ப் பேரூர்’ இறைவனை வழிபட்டனர். இங்கு நின்றாடும் கூத்தப்பிரான் அருட்பொலிவு சாந்தலிங்கரை மிகவும் ஈர்த்தது. இத்தலப்பயண வழிபாட்டிற்குப்பிறகு இருவரும் திருவண்ணாமலையை அடைந்தனர்.

சிவப்பிரகாசர், சாந்தலிங்கரின் பழுத்த தவநிறைவினை உணர்ந்தார். “சாந்தலிங்கரிடம் நீர் முதிர்ந்த தவநிலை பெற்றுள்ளீர், மக்களுக்கு வழிகாட்டுவதுடன், மாணாக்கருக்குத் தெளிவையும், ஞானவுணர்வையும் உருவாக்கும் வகையில் நீர் விரும்பும் இடத்திற்குச் சென்று வழிகாட்டுதலே சிவநெறிக்குச் செய்யும் பெருந்தொண்டாகும், ஆதலின் நும்சிந்தனையில் இடம்பெறும் திருத்தலத்திற்குச் செல்வீராக” என்று ஆணைவழி நெறிப்படுத்தினார். குருநாதரின் ஆணைவழி புறப்பட்ட சாந்தலிங்கர், உழவுத் தொழிலால் வளம்பெற்ற கொங்குநாட்டில் உள்ளதும், தமது மனதினை ஈர்த்துமாகிய பிறவாநெறித்தலமாகிய பேரூரை நோக்கிப் புறப்பட்டார்.

வரும்வழியில் சுந்தரரால் முதலைவாய்ப்பிள்ளையை மீட்ட திருப்பதிகம் பெற்ற அவிநாசித் திருத்தலத்தில் சில காலம் தங்கி அவிநாசியப்பரை வழிபட்டார். இதனை, தமது வைராக்கியசத்தகப் பாடலில்

"கொள்ளேனெனினும் எழுத்தைந்தும் உள்கோது யாதும்
தள்ளேனெனினும் உனைச்சார்தவம் சார்ந்திலாரை
விள்ளேனெனினும் எனைநீ கைவிடேல் காண்
நள்ளாறுடையாய் அவிநாசி நயந்துளானே" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அவிநாசியப்பரை வழிபட்டு சில காலம் தங்கியிருந்தபின் 'பிறவாநெறித்தலம் ஆகிய பேரூருரை' அடைந்து அங்குள்ள அரசவனத்தில் தன்னை மறந்தநிலையில் தவம் மேற்கொண்டார். அவரது அருட்பொலிவையும், தவஉணர்வையும் கண்ட சிவநெறியாளர்கள் தாமே அணுகி அணுக்கப் பணிசெய்துள்ளனர். பின் அவர் தங்குவதற்கு எனத் தனியே திருமடம் அமைத்துக் கொடுத்தனர். இந்நிகழ்வினைத் தண்டபாணி சுவாமிகள் அருளிய

"சாலக் கருணைத்தழைத்தகுரு தாள்பணிந்து
கூலப் பொலிவாரும் கொங்கு வளநாட்டினிடை
மேலச் சிதம்பரமாம் மிக்க புகழ்ப் பேரையினில்
சீலத்தர் போற்றத் திருமடம் செய்துற்றானே"

என்ற புலவர் புராணப் பாடலாலும் அறியலாம்.

சாந்தலிங்கரது அருள்தோற்றத்தையும், தவப்பொலிவையும் காண அடியவர் கூட்டம் நாளும் பெருகியது. பணியாளர்களின்றித் தொண்டர்களே பணிசெய்யும் பாங்கு வளர்ந்தது. இதனை,

"ஏறும் விடைபுரப்போன் ஏடுகை கொண்டே படிப்போன்
சோறு சமைப்போன் துகிற்பணி செய்வோன்—முதலாத்
தேறும் நிமித்தம் திருத்தொண்டு செய்பவராக்
கூறும் அடியார் குழாம் பலவும் கொண்டானே"

என்ற புலவர் புராணப் பாடலாலும் அறியலாம்.

இத்தகு சீடர் பரம்பரையைத் தோற்றுவித்த சாந்தலிங்கருக்கு மீண்டும் குருநாதரை வழிபடவும் மயிலம் முருகன் பேரருள் பெற்ற சித்தராகிய சிவஞானபாலையர் வழிவந்த இரண்டாம் பட்டம் அருட்குரவராக, பொம்மையபாளையம் திருமடத்தில் இருந்த சிவஞானபாலயரை வணங்கவும் சிந்தனை எழுந்தது. இத்தகு சிந்தையராகத் துறையூர்த் தலப்பயணமாகச் சென்று குருநாதரை வழிபட்டுச்சில காலம், அத்தலத்தே தங்கியிருந்தார்.

துறையூரிலிருந்து பொம்மபுரம் செல்லும் வழியில் துறைமங்கலத்தில் தங்கியிருந்த கற்பனைக்களஞ்சியம் சிவப்பிரகாசரைச் கண்டு, அளவளாவிச் சிலகாலம் உடன் தங்கினார். சிவப்பிரகாசரின் நாள் வழிபாட்டுக்கு வேண்டிய பணிகளை அவரது தங்கை ஞானாம்பிகையார் செய்து வந்தார். சாந்தலிங்கரும், சிவப்பிரகாசரும் மெய்ப்பொருள் பற்றி அருளும் உரைகளை அவ்வம்மையார் நாளும் கூர்ந்துநோக்கினார். இதைக் கண்ணுற்ற சாந்தலிங்கர் இந்நங்கை யார்? எனச் சிவப்பிரகாசரிடம் வினவினார். (என்து தங்கை) அவர் அங்கைக்கு உரியவர் ஆவார் என விடைகூறினார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் இருவரும் அடியவருடன் பலதலங்களை வழிபட்டுப் புதுவைக்கு அருகிலுள்ள பொம்மையபாளையம் புறப்பட்டனர். வழியில் சிவஞானபாலையதேசிகர் மீது அருட்பாக்களைப் பாடியருளுமாறு சாந்தலிங்கர் சிவப்பிரகாசரை வேண்டினார். அதற்குச் சிவப்பிரகாசர் கடவுளைத் தவிர மனிதரைப் பாடுவதில்லை என விடைகூறி மறுத்தார். இரவுநேரம் வந்துற்றதால் 'புத்துப்பட்டு' என்னும் ஊரில் ஐயனார் கோயில்வளாகத்தில் தங்கி, உறக்கம் மேற்கொண்டனர்.

சிவப்பிரகாசர் கனவில் முருகப்பெருமான் தோன்றி மலர்களைத் தட்டில் வைத்து இதனைத் தொடுத்து மாலையாக்கித்தருமாறு பணித்தார். இச்செய்தியை மறுநாட்காலை சாந்தலிங்கரிடம் சிவப்பிரகாசர் கூறினார். சாந்தலிங்கர் முருகனே, முருகனது பேரருள்பெற்ற சிவஞானபாலயரைப் பாட உணர்த்தியுள்ளார் என்று கூறினார். சிவப்பிரகாசர் சிவஞானபாலையசுவாமிகள் மீது நெஞ்சுவிடுதூது பாடி, சுவாமிகளை வழிபட்டுத் தங்கினார். இவர்களது வரலாற்றினையும், பயணச் சிறப்பினையும் அறிந்து இருவர்க்கும் சிவஞானபாலையசுவாமிகள் அருள்பாலித்தார். இவ்வாறு அருள்செய்த சிவஞானபாலையசுவாமிகள் 500 ஆண்டுகள் வாழ்ந்தவர் என வரலாறு கூறுகிறது. இவர் சிவப்பிரகாசரின் தங்கை ஞானாம்பிகை அம்மையாரைச் சாந்தலிங்கருக்குத் திருமணம் செய்து வைக்குமாறு அருளாணை வழங்கினார்.

ஞானாம்பிகையாருடன் சாந்தலிங்கர் பேரூர்க்கு எழுந்தருளி திருமடத்திலிருந்து அடியவர்களுக்கு நல்வழி காட்டிவந்தார். ஞானம்பிகையார் முதிர்ந்த அறிவோடு இல்லற நெறியில் நின்று அருட்பணிகளில் ஈடுபட்டார்.

சாந்தலிங்கர் செம்பொருள் அறியும் நெறியாளராக விளங்கினார். முத்தியைப் பெற விரும்பிய இல்லறத்தாரும், பற்றற்ற துறவியர்களும் சாந்தலிங்கரின் அருளைப்பெற நாளும் பெருகினர். ஞானாம்பிகையார் இல்லற நெறியில் நின்று நாளும் விருந்து பேணினர். புதிய அடியவராக, வீரசைவ அடியவர் ஒருவரை நாளும் உடனிருத்தி அமுது செய்வது சாந்தலிங்கரின் கொள்கையாகும். இக்கொள்கைக்கு ஏற்ப ஒருநாள் புதிய அடியவர் ஒருவரைத் தேடினர். பேசா நோன்பும், உறக்கமின்மையும் தமது விரதமாகக் கொண்ட மௌனசாமிகள் தில்லையிலிருந்து பேரூர்க்கு எழுந்தருளினார். புதிய அடியவராகிய அவரை அழைத்து வீரசைவ நெறிக்கு ஏற்ப அவரது சடைமுடியில் சிவலிங்கம் அணிவித்து, உடனிருத்தி, அமுதிட்டு மகிழ்ந்தனர். அன்று முதல் மௌனசாமிகள் 'வீரசைவரானார்'. தில்லையில் அவரது திருமடத்தில் வீரசைவநெறி பின்பற்றப்படுகிறது.

மெய்யியல் கருத்துக்களை அறிஞர்களிடையே பரவச்செய்ய வேண்டும் என்ற உள்ளக்குறிப்பால் நான்கு நூல்களை இயற்றியருளினார் என்பதை, முருகதாச அடிகள்

"கூசல் அறக்கருணை கூட்டும் கொலைமறுப்பும்
ஈசனது பத்திக்கு இனிதாம் சதகமும் பொய்ப்
பாசம் முழுதும் பறித்தெறியும் தீபமும் நெஞ்சக
ஊசல்நிகர் ஆட்டொழிக்கும் உந்தியுமாம் நூல்பெயரே"

என்றும் எடுத்துரைக்கிறார்கள்.

இந்நூல்கள் 'வீட்டுநெறியை விளக்கும் நூல்கள்' என்கிறார் தண்டபாணி சுவாமிகள். இதனை,

'நன்கு முத்தி வீட்டிலுறும் நான்கு பெரு வாயில்கள்
என்குணங்கள் போற்றிடும் நூல் ஈரிரண்டு செய்தானே' என்பதாலும்
எம்மதத்தில் உள்ளவர்கள் எந்நிட்டை சொன்னாலும்
சம்மதமேயாம் எமக்குத் தற்போதம் மாய்க்கில் எனப்
பொய்ம்மதத்தோர் நாணப் புகன்றளும் அப்புனிதன்
மும்மதமாப் போலும் முழுஞான வீரன்அம்மா" என்ற புலவர்புராணப்

பாடலடிகளாலும் நன்கு அறியலாம். மேலும், இவரது நூல்களை ஓதியுணர்ந்து சாந்தலிங்கரது மெய்ப்பொருள் உரையை நாளும் கேட்டு மகிழ்ந்தவர்களுள் சிலர், 'சாந்தலிங்கர் இல்வாழ்க்கையில் இருந்து கொண்டே துறவுநெறிக்கு விளக்கம்

தருகிறார்' என ஒருவருக்கொருவர் வினா எழுப்பினார். ஒருநாள், ஞானாம்பிகையாரை உடனிருத்திப் பாடம் சொன்னார். அவ்வேளையில் சாந்தலிங்கரும், ஞானாம்பிகையாரும், கயிலைநாதரும் உமையம்மையுமாக மாணாக்கருக்குக் காட்சியளித்தனர். இக்காட்சி கண்ட மாணாக்கர், தாழ்ந்து பிழைபொறுக்க வேண்டினர். இந்நிகழ்வினையடுத்துச் சாந்தலிங்கர் முழுத்துறவு பூண விரும்பினார். இதற்காக, இறைவனது திருக்குறிப்பை உணர எண்ணினார். அதன்படி, 'இன்று யாம் திருவமுது ஏற்கப் புறப்படுகிறோம். முதலில் பாலன்னம் கிடைக்குமானால் முழுத்துறவு நெறியில் நிற்போம்' என்கிறார். அவரது நினைப்புக்கு ஏற்பவே பாலன்னம் கிடைத்தது. தனது துணைவியாரைப் பாதுகாப்புக்குரிய இடத்தில் தங்கி இறைபணியும் செய்யுமாறு சாந்தலிங்கர் பணித்தார் ஞானாம்பிகையார் திருவண்ணாமலை சென்று பெரியமடத்தில் தங்கிச் சமயப்பணி ஆற்றிவந்தார். திருவண்ணாமலையில் இறையருள் பெற்றார். அந்த இடம் ஞானாம்பிகை பீடமாக திருமடத்தின் முகப்பில் பலருக்குக் குலதெய்வமாக விளங்குகிறது.

சாந்தலிங்கர் திருவமுது ஏற்கத் திருப்பேரூர் வீதியில் செல்லும்போது ஒரு சிறுவனை அன்பினால் நோக்கினார். உடன் அச்சிறுவன் பற்றுக்களைவிட்டுச் சாந்தலிங்கருக்கு அடியவனானான். ஆதலால், அன்று முதல் சாந்தலிங்கர் வீதியில் வரும்நிலையில் தாய்மார் தம்மக்களை மறைத்துவைத்துக் கொள்வர் என்ற செவிவழிச் செய்தியும் உண்டு.

சாந்தலிங்கர் அவிரோத நெறியில் நின்று பிறமதத்தாருடன் நட்புப் பாராட்டி வந்துள்ளார். இந்நிகழ்ச்சிக்கு அகச்சான்றாகப் பின்வரும் நிகழ்ச்சி அமைகிறது. கோவை மாநகரப் பகுதியில் வாழ்ந்துவந்த இசுலாமிய அன்பர்கள் சாந்தலிங்கரது மாணவர் ஒருவரிடம் அன்புகொண்டு அவருடன் நாள்தோறும் அருளுரைகேட்டுப் பழகி மகிழ்ந்தனர். அவர் திருவருட்பேறு எய்தும் நிலையில் இசுலாமிய அன்பர்கள் தாங்களே அவருக்குச் சமாதி அமைப்பதாக வேண்டினர். அவரும் 'நீங்கள் அமைக்கும் சமாதிக்கோயிலில், நமது சிவநெறிக்கு உரிய திருநீற்றை வைத்துப் பேணவேண்டும் என அருளினார். இதனைக் கேட்ட இசுலாமிய அன்பர்களும் அதனை ஏற்றனர்'. கோவை மாநகரின் பெரிய கடைவீதிப் பகுதியில் இச்சமாதி, **'கோனி'** என்ற பெயரில் வழங்கி வருகிறது. அக்கோயிலில் மக்கள் அணிந்து

கொள்ளத் தெற்கு மாடத்தில் திருநீறு வைக்கப்பட்டுள்ளது. இன்றும் அக்கோயிலில் திருநீறுவைப்பது வழக்கமாக இருந்து வருகிறது.

சாந்தலிங்கரின் மெய்ப்பொருள் உண்மைகளை விளக்கும் வகையில், அவர் அருளிய கொலைமறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் என நான்கு நூல்களும் விளங்குகின்றன. இந்நூல்களுக்குச் சாந்தலிங்கரின் மாணாக்கராகிய திருமுதுகுன்றம் குமாரதேவரின் மாணக்கர் திருப்போரூர் 'சிதம்பர அடிகள்' சிறந்த உரையினை எழுதியுள்ளார். இவ்வுரை மெய்ப்பொருளை விளக்கும் வகையில் திட்பமும், நுட்பமும் செறிந்து விளங்குகிறது.

சாந்தலிங்கரின் மாணாக்கராகிய குமாரதேவர் கன்னட அரசர். அரசு துறந்து துறவு பூண்டு சாந்தலிங்கர் நெறியில் நின்று வீரசைவக் கொள்கைகளை விளக்கும் வகையில் மகாராசா துறவு, சுத்தசாதகம், விஞ்ஞானசாரம், அத்துவித உண்மை, பிரமானுபூதி விளக்கம், ஞானவம்மானை, வேதாந்த தசகாரியக்கட்டளைச் சுருக்கம், வேதாந்த தசகாரியக்கட்டளை, சகசநிட்டை, உபதேச சித்தாந்தக்கட்டளை, பிரம சித்தியகவல், சிவதரிசன அகவல், ஆகம நெறியகவல், வேதநெறியகவல், பிரமானுபவ அகவல், சிவசமவாத அகவல் ஆகிய நூல்களை அருளியுள்ளார். போரூர் சிதம்பரசுவாமிகள், சந்நிதி முறை, பஞ்சாதிகார விளக்கம் ஆதிய நூல்களை அருளியுள்ளார்.

இறையருளோடு குருவருளும் பெற்று பல அடியார்களை உருவாக்கி வீரசைவ மரபை போற்றி வளர்த்த சாந்தலிங்கர் பேரூர் திருமடத்தில் நீண்டகாலம் மாணாக்கர்கட்கு நன்னெறிகாட்டி தவநிலையில் முதிர்ந்து ஒருமாசித் திங்கள் மகம் விண்மீன் கூடிய நிறைமதி நாளில் ஞானநிலை அடைந்து தாம் வழிபடும் கூத்தப்பெருமான் திருவடியில் கலந்தார். இச்செய்தியை புலவர் புராணஆசிரியர்

"ஆனந்த என்னும் அலைஇல்பெரும் சாகரத்தில்
ஈனந் தவிர்ந்தே இருந்துபல நாள்கழித்துத்
தானந்த மாதி தவிர்பதத் துற்றான்; அவன்றன்
ஊனந்த ஊருக் கொருகோயில் நல்கியதே"

என்று குறிப்பிடுகிறார். இவர் பேரூருக்கு வந்து சமாதிக் கோயிலில் வழிபாடாற்றி, பதிகப்பாடல்கள் அருளியுள்ளார்.

சாந்தலிங்கரின் சமாதித் திருக்கோயில் முற்காலத்திலேயே கற்கோயிலாகப் பேரூரில் சிறந்து விளங்குகின்றது. இத்திருக்கோயிலும் இதைச் சார்ந்த திருமடமும் ஞானப்பயிர் வளர்க்கும் பண்ணையாக இன்றும் திகழ்ந்து வருகின்றன. சாந்தலிங்க அடிகளாரின் குருவழிபாடு திங்கள்தோறும் மகநாளில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இங்கு மாசித் திங்களில் நடைபெறும் குருபூசைவழிபாடு கொங்குநாடு முழுதும் புகழ்பெற்ற ஒன்றாக விளங்கி வருகின்றது. சிரவையாதீனம், இரண்டாவது குருமுதல்வர் தவத்திரு கந்தசாமி அடிகள் அவர்கள் சாந்தலிங்கர் பதிகமும், பிள்ளைத்தமிழும் பாடியுள்ளார்.

கறைதோய் பாவம் அறச்சீவகருணை பெருக்கும் கொலைமறுத்தல்,
காளகண்டன் தாளஅகண்டக் கண்கூட்டிடல் ஆம்மெய்ப் பத்தித்
துறைதோய் வைராக்கிய சதகம், சொற்றுத் துதிப்பார் மனம் உருக்கும்
துதிப்பாஇனங்கள் உளப்பாசம் துமிக்கும் வைராக்கியதீபம்
நிறைதோய் பரமா னந்த அருள் நிலையங்காட்டிப் புலத்தில் உந்து
நெஞ்சக்கவியைக் கட்டிஇன்ப நிட்டைகூட்டும் உந்திஎனும்
முறை தோய்நூல்செய் நின்கனிவாய் முத்தம் தருக முத்தமே
முதிர்சீர்ச் சாந்த லிங்கஅருள் முத்தா முத்தம் தருகவே.

காரணனை மால்விடையிற் கண்டவிதம் நீயுரைத்தும்
பேரறிவே நானெனுஞ்சொற் பேசிவம்பில் மாய்வேனோ?
வீரசைவ சித்தாந்த மெய்யடியார் மிக்குவந்து
சாரவல்ல பேரைநகர்ச் சாந்தலிங்க தேசிகனே.

– வண்ணச்சரபம் அருள்மிகு முருகதாச அடிகள்

சாந்தலிங்கர் பூசனையிற் சந்தமும் செந்தமிழால்
வாய்ந்தவழி பாடுசெயும் மாண்பினது –தோய்ந்தபட்டிப்
பெம்மான்தன் கோயிலினும் பேணிச் செயும் சிறப்பு
எம்மாட்டும் ஏற்றமுற்ற தீண்டு.

– தவத்திரு சுந்தரம் அடிகள்

13. சாந்தலிங்க அடிகளார்
(5) திருப்பேரூர் ஆதீனநிறுவனர்

12. ஞானக் கூத்தர்
(துறையூர் திருவண்ணாமலை ஆதீன
பெரிய மடம்)

திருவண்ணாமலை துறையூர் ஆதீன
குருமுதல்வர் குமாரதேவர்
(திருமுதுகுன்ற திருமட நிறுவனர்)

சிதம்பரசுவாமிகள்
(திருப்போரூர் ஆதீன
நிறுவனர்)

நாச்சிமுத்து சுவாமிகள்

இராமலிங்க சுவாமிகள்

சச்சிதானந்த சுவாமிகள்

மௌன சுவாமிகள்

மாணிக்க சுவாமிகள்

ஆறுமுக சுவாமிகள்

மௌனசாமிகள்
(சிதம்பரம் திருமட
நிறுவனர்)



சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

நமது ஆதீன வெளியீடுகள்

1. வைராக்கிய சதகம்	–	ரூ 35.00
2. வைராக்கிய தீபம்	–	ரூ 15.00
3. அவிரோத உந்தியார்	–	ரூ 45.00
4. கொலை மறுத்தல்	–	ரூ 30.00
5. எங்கள் நாட்டுப்புறம்	–	ரூ 25.00
6. கோவைகிழாரின் சமயநோக்கு	–	ரூ 10.00
7. கணிப்பொறி கற்க	–	ரூ 40.00
8. ஞான அம்மானையும் அகவல்களும்	–	ரூ 20.00
9. நாளும் சிவநெறி	–	ரூ 50.00
10. நியாயக்களஞ்சியம்	–	ரூ 125.00
11. பெருங்கதை ஆய்வு மாலை	–	ரூ 500.00
12. புறப்பாட்டுரை	–	ரூ 25.00
13. கொங்கு நாட்டு வரலாறு	–	ரூ 150.00
14. கோயிலும் தமிழும்	–	ரூ 40.00
15. கொங்குநாடும் சமணமும்	–	ரூ 60.00
16. தமிழாகமத் திருக்குட நன்னீராட்டு	–	ரூ 75.00
17. சிவஞானபோதத் திருநெறியவுரை	–	ரூ. 50.00
18. திருவிளக்குவழிபாடு	–	ரூ. 20.00
19. சாந்தலிங்கரின் மெய்யியல் கோட்பாடுகள்	–	ரூ. 60.00
20. நால்வர்களும் கல்வெட்டுக்களும்	–	ரூ. 40.00
21. சிறுவர் சிவஞானம்	–	ரூ. 25.00
22. வண்ணத்தியல்பு	–	ரூ. 10.00
23. கொலைமறுத்தல் உரைநடை	–	ரூ. 15.00